# உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்
# WORLD TAMIL RESEARCH ASSOCIATION

(Formerly known as **International Association of Tamil Research – IATR**)

**உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணியில் 03.09.2016 அன்று பிற்பகல். 3.00 மணிக்கு நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் நான்காவது கூட்டக்குறிப்பு**

A. **கூட்டத்தில் பங்குகொண்டவர்கள்**

1. முனைவர் மு.பொன்னவைக்கோ, துணைத்தலைவர், மையக்குழு,. மற்றும் குழும இயக்குநர்களில் ஒருவர்
2. திரு.இரா.முத்துகுமாரசாமி, பொருளாளர், மையக்குழு, மற்றும் குழும இயக்குநர்களில் ஒருவர்
3. முனைவர் உலகநாயகி பழனி, பொதுச்செயலர், மையக்குழு, மற்றும் குழும இயக்குநர்களில் ஒருவர்
4. திரு.இரா.காந்தி, குழுமம் நிறுவியவர்களில் ஒருவர்
5. முனைவர் இ.சுந்தரமூர்த்தி, குழும இயக்குநர்களில் ஒருவர்
6. முனைவர் அரங்க இராமலிங்கம், சிறப்பு அழைப்பாளர்
7. முனைவர் மணிகண்டன், சிறப்பு அழைப்பாளர்
8. திரு. இரா.மதிவாணன், சிறப்பு அழைப்பாளர்

B. **கூட்டத்தில் பங்குபெறாமல் விடுப்பு பெற்றவர்கள்**

1. முனைவர் ப.மருதநாயகம், ஒருங்கிணைப்பாளர், மையக்குழு, மற்றும் குழும இயக்குநர்களில் ஒருவர்
2. முனைவர் ப.அர. நக்கீரன், குழுமம் நிறுவியவர்களில் ஒருவர்

C. **நிகழ்வுப்பொருள்கள் பற்றி எடுத்த முடிவுகள்;**

1. வரவேற்பு ; துணைத்தலைவர் முனைவர் மு.பொன்னவைக்கோ கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் அன்புடன் வரவேற்றார்.
2. முனைவர்.பொன்னவைக்கோ கீழே கொடுக்கப்பட்டுள்ள பணி முன்னேற்ற அறிக்கையை வழங்கினார்; அறிக்கை இணைப்பு - 1-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.1 நிறுவன உறுப்பினர் சேர்க்கை;

i. பாரதியார் சங்கத்தலைவர் திரு. இரா.காந்தி அவர்கள் பாரதியார் சங்கத்தை உறுப்பினராகச் சேர்க்க விண்ணப்பம் அளித்துள்ளார்.
ii. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இந்திய ஒன்றியத் தலைவர் திரு. இரா.காந்தி அவர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இந்திய ஒன்றியத்தை உறுப்பினராகச் சேர்க்க விண்ணப்பம் அளித்துள்ளார்.

2.2 கருத்தரங்குகள் நடத்துதல் பற்றிய முடிவு;

முனைவர் உலகநாயகி அவர்கள் திங்கள்தோரும் இலக்கிய சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தவேண்டுமென 2016- ஆம் ஆண் ஜூலை மாதம் 20-ஆம் ேததி தமிழ் இணையக் கல்விக்கழக வளாகத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் முதல் குழுமக் கூட்டத்தில் எடுத்த முடிவுக்கேற்ப, 18 மாதங்களில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களாகிய 18 இலக்கியங்களின் வாழ்வியல் சிந்தனைகள் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்துவதற்கான பொருண்மைகளையும் சொற்பொழிவாளர்களின் பெயர்களையும் இணைப்பு - 2-இல் உள்ளவாறு வழங்கினார்; முதற்கூட்டம் 2017-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் காரி(சனி)க்கிழமையன்று மயிலாப்பூர் பாரதிய வித்தியா பவனில் நடைபெறும் என்றும் ஒவ்வொரு மாதமும் சிறப்புச் சொற்பொழிவுகள் மயிலாப்பூர் பாரதிய வித்தியா பவனிலேயே நடைபெறும் என்றும் தெரிவித்தார்கள்.

2.3 தமிழாய்வுக் குழுக்கள் அமைத்து சங்க இலக்கிய ஆய்வுகளை மேற்கொள்ளல் பற்றிய முடிவு;

சங்க இலக்கிய ஆய்வியல் பொருண்மையில் எட்டுத்தொகை நூல்களை கீழ்க்காணும் பத்து தலைப்புகளில் தனித்தனி குழுக்கள் அமைத்து ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

2.3.1 ஆயவுப்பொருண்மைகள்;

i. அகழாய்வு, தொன்மை, நாணயம், வரலாறு
ii. பண்பாடு
iii. சமூகவியல்
iv. கல்வி

v. மானிடவியல்

vi. தொல்லியல்

vii. கலைச்சொறகள், சொற்பொருள் விளக்கம்

viii. மொழிபெயர்ப்பு

ix. ஆய்வுகள்

x. பிற

2.3.2 ஆய்வறிஞர்கள்;

எட்டுத்தொகை நூல்கள் ஒவ்வொன்றையும் மேற்கண்ட பொருண்மையில் ஆய்வு செய்ய கீழ்க்காணும் அறிஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;

i. முனைவர் இ.சுந்தரமூர்த்தி

ii. முனைவர் கு.வே.பாலசுப்பிரமணியன்

iii. முனைவர் பா.இராசா

iv. முனைவர் தெ.ஞானசுந்தரம்

v. முனைவர் அரங்க இராமலிங்கம்

vi. முனைவர் மணிகண்டன்

vii. முனைவர் மதிவாணன்

viii. முனைவர் அறிவுநம்பி

ix. முனைவர் பக்தவத்சல பாரதி

x. முனைவர் இராசன்

இவர்களில் யார் யார் எந்தநெந்த நூலைப்பற்றி ஆய்வு செய்ய விரும்புகின்றார்களோ அவர்களுக்கு அவர்கள் விருப்பப்படி நூலாய்வுப் பொறுப்பை வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

xi. தொல்காப்பிய நூலாய்வு முந்தைய கூட்டங்களில் எடுத்த முடிவின்படி முனைவர் ப.மருதநாயகம் அவர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது.

2.4 ஆய்விதழ் வெளியிடுதல் பற்றி கலந்தாய்வு செய்து எடுத்த முடிவு;

அமெரிக்காவில் புலவர் பிரான்சிசு சவரி முத்து அவர்கள் Tamil Culture and Civilization என்னும் இதழை International Institute of Tamil Culture and Civilization

Inc. என்னும் நிறுவனத்தைத்தொடங்கி அந்த நிறுவனத்தின் வாயிலாக வெளியிட்டு வருகின்றார். அந்த இதழை உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் வாயிலாக வெளியிட விருப்பம் தெரிவித்துள்ளார். அவர் விருப்பத்தை ஏற்று International ajournal of Tamil Culture and Civilization என்ற பெயரில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மும்மொழிகளில் கட்டுரைகளை வெளியிடலாம் என முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக புலவர் முத்து அவர்களையே முதன்மைப் பதிப்பாளராக நியமித்து மேற்கொண்ட நடவடிக்கைகளை செய்யுமாறு புலவர் முத்து அவர்களைக் கேட்டுக்கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது.

2.5 உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் 10-வது மாநாடு பற்றி கலந்தாய்வு செய்து எடுத்த முடிவு;

ஒன்பதாவது மாநாட்டின்போது பத்தாவது மாநாடு சிக்காகோ பலகலைக்கழகம் வடஅமெரிக்க தமிழ்ச்சங்கங்களின் அமைப்புடன் இணைந்து நடத்துவதாக முடிவெடுக்கப்பட்டு அம்முடிவை உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் ஒருங்கிணைக்கும் பொறுப்பை புலவர் பிரான்சிசு சவரி முத்து அவர்கள் ஏற்று செயல்படுத்தி வருகின்றார்கள் என்று முனைவர் பொன்னவைக்கோ அவர்கள் தெரிவித்தார்கள். உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மையக்குழு இம்மாநாடு சிறப்பாக நடைபெற புலவர் பிரான்சிசு சவரி முத்து அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்குமென முடிவு செய்யப்பட்டது..

2.6 தமிழ் இலக்கியங்களின் பிற மொழி பெயர்ப்புகள் பற்றி ஆய்தல் பற்றிய முடிவு;

தமிழ் இலக்கியங்களின் பிற மொழி பெயர்ப்புகள் பற்றி ஆய்வதற்கு, முதலில் இதுவரை எந்தெந்த நூல்கள் எந்தெந்த மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன என்ற விவரங்களைத் திரட்ட வேண்டும் என கருத்து தெரிவிக்கப்பட்டது. இப்பொறுப்பினை முனைவர் இரபி சிங்கு அவர்களிடம் ஒப்படைக்கலாம் என முடிவு செய்யப்பட்டது. மற்ற உறுப்பினர்களும் இது தொடர்பாக அவர்களுக்குத் தெரிந்த செய்திகளைத்திரட்டி அளிக்குமாறு கேட்டு கொள்ளப்பட்டார்கள்.

2.7 அயல்மொழிச் சூழலில் வாழ்வோர்க்கு பல்கலைக்கழகங்களை ஒருங்கிணைத்து தமிழ்க்கல்வி வழங்குவது பற்றி ஆய்வு செய்து எடுத்த முடிவு;

அயல்மொழிச் சூழலில் வாழ்வோர்க்கு தமிழ்க்கல்வி வழங்க உலகில் பல்வேறு நிறுவனங்கள் தனித்தனியே செயல்பட்டு வருகின்றன. ஒரு நிறுவனம் ஒரு நாட்டைச்சார்ந்த மக்களுக்காக செய்யும் பாடங்கள் முழுமையாக வேறு நாட்டுச் சூழலுக்கு எற்புடையதாக இருப்பதில்லை. ஆயினும் பெரும் பகுதி பொதுவாகவே இருக்கும். பொதுவான பாடத்தை வடிவமைத்துவிட்டால் ஒவ்வொரு நாட்டுச் சூழலுக்கு ஏற்றவாறு மாற்றவேண்டிய பகுதிகளை மாற்றி அமைத்துக்கொள்வது எளிது. இதனால் முயற்சியும் செலவும் குறையும்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தேசியக்கிளைகளின் உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து அவரவர்கள் தேவைகளை தொகுத்து அக்குழுவின் துணையோடு பாட நூல்கள் வடிவமைக்கும் பொறுப்பை உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மையக்குழு ஒருங்கிணைத்து செயல்படுத்தலாம் என முடிவு செய்யப்பட்டது.

3. பிற பொருள்கள் பற்றி கலந்தாய்வு செய்தவை

6.1. உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் திங்கள்தோரும் நடத்தத் திட்டமிட்டுள்ள இலக்கியங்களின் வாழ்வியல் சிந்தனைகள் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளை நடத்துதல், சங்க இலக்கியங்கள் பற்றிய தமிழியல் ஆய்வுகள் நடத்தி ஆய்வு முடிவுகளை நூல்களாக வெளியிடல், பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்படாத சங்க இலக்கியங்களை மொழியாக்கம் செய்து நூல்களாக வெளியிடல், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தேசியக்கிளைகளின் உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து அவரவர்கள் தேவைகளை தொகுத்து அக்குழுவின் துணையோடு பாட நூல்கள் வடிவமைக்கும் பொறுப்பை உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மையக்குழு ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கு நிதி தேவைப்படுவதால், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திடம் உள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் 8-வது மாநாட்டு மலர் விற்பனைத் தொகையாகிய உரு.12.18 இலட்சத்தை உலகத்தமிழ்

ஆராய்ச்சி மன்றத்தின் இயக்குநருக்கு பெற தீவிர முயற்சி செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

6.2. மேலே குறிப்பிட்டுள்ள செலவினங்களுக்காகவும் உலகத்தமிழாய்வு மாநாட்டுச் செலவினங்களையும், எந்தவொரு நாட்டு அரசியல் நிறுவனங் களையும் முழுமையாக நம்பி இருக்காமல், மன்றமே செலவினங்களை ஏற்று நடத்துவதற்கு வேண்டிய நிதி மூலதனம் உருவாக்க வேண்டும் என்றும் அதற்காக, மன்றத்திற்கு நன்கொடை / அன்பளிப்பு பெற மன்றத்தின் மையக்குழுவின் (Central Council) அதிகாரத்தில் உள்ள அனைவரும் வேண்டிய முயற்சிகள் எடுக்க வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது.

6.3. மன்றத்தின் செயற்குழு மாதந்தோரும் கூடி மன்றத்தின் பணிமுன்னேற்றம் பற்றி கலந்தாய்வு செய்யவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

6.4. தேசிய கிளைகள் ஒவ்வொன்றும் இணைப்பு -3-இல் கொடுக்கப்பட்டுள்ள செயல்திட்டங்களை செயற்படுத்தி பணிமுன்னேற்ற அறிக்கையை மையக்குழுவிற்கு வழங்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

4. நன்றி நவிலல்.

கூட்டம் இனிதே நன்றி நவின்றதுடன் முடிவுற்றது.

அன்புடன்,
மு.பொன்னவைக்கோ
இந்தியத் துணைத்தலைவர்,
உ. த. ஆ. மன்றத்தின் மையக்குழு

**இணைப்பு - 1**

**பணி முன்னேற்றஅறிக்கை**

i. உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் WORLD TAMIL RESEARCH ASSOCIATION என்ற பெயரில் 2016-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் நாள், sub-section (2) of section 7 of the Companies Act, 2013 and rule 8 the Companies (Incorporation) Rules, 2014 கீழ், MINISTRY OF CORPORATE AFFAIRS, GOVERNMENT OF INDIA -வின் Central Registration Centre - இல் பதிவு செய்யப்பட்டது. பதிவெண் ; CIN U80300TN2016NPL110744.

ii. PAN Card பெறப்பட்டது. PAN எண் ; **AABCW8291P.**

iii. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கு அலுவலக அறை கேட்டுப்பெறுள்ளோம்.

iv. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திடம் உள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் 8-வது மாநாட்டு மலர் விற்பனைத் தொகையாகிய உரு.12.18 இலட்சத்தைப் பெற உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இயக்குநருக்கு விண்ணப்பித்துள்ளோம்.

v. உறுப்பினர் சேர்க்கை;
   a. தனிமனித உறுப்பினர்கள;
      a.1 ஆண்டு உறுப்பினர்கள் ; 2
      a.2 வாழ்நாள் உறுப்பினர்கள்; 14

vi. தேசியக்கிளைகள்; பதிவு செய்யப்பட்டுள்ள கிளைகள்; 3

   a. மலேசிய நாட்டுக்கிளை
   b. மரூசியசு நாட்டுக்கிளை
   c. தென்னாப்பிரிக்க நாட்டுக்கிளை

vii. பதிவு செய்ய விருப்பம் தெரிவித்துள்ள நாடுகள;

   a. ஆசுத்திரேலியா ( திரு.சுகுமாறன் )
   b. சுவிட்சர்லாந்து ( திரு.பார்த்திபன் )
   c. இங்கிலாந்து ( முனைவர். சிவா பிள்ளை )
   d. கனடா ( திரு.துரை ராசா )

e. அமெரிக்கா ( முனைவர். பிரான்சிசு முத்து )

f. பிரான்சு ( திரு.சச்சிதானந்தம்/ திரு.அப்பாசாமி முருகையன் )

g. இலங்கை ( முனைவர். தமிழ்டஅருவி சிவகுமார் & திரு.சரவணபவன் )

viii. நிதி நிலைமை ;

**a. வருவாய்**

i. இயக்குநர்களின் பங்களிப்பு ( 7x15000 ) …. உரு. 1,05,000.00

ii. உறுப்பினர் கட்டணம் … உரு. 42,000.00

iii. அமெரிக்க டாலர் US $.700.00 ( வழங்கிய காசோலை இன்னும் வங்கிக்கணக்கில் ஏறவில்லை )

**b. செலவு**

i. மன்றப்பதிவு கட்டணம் ( Professional Fees ) …. Rs. 75,000.00

ii. மன்றப்பதிவு கட்டணம் ( Service Charges to Auditor ) Rs. 17,000.00

iii. இணையதள பதிவுக்கட்டணம் ................................................ Rs. 6,034.00 (To be paid)

iv. உ. த. ஆ. மன்ற முத்திரைகள் செய்கூலி Rs. 2000.00 (To be paid)

v. பத்தாவது மாநாடு தொடர்பாக சிக்காகோ பல்கலைக்கழகத்தாருடன் கதைப்பதற்காக கலிபோர்னியாவிலிருந்து சிக்காகோ சென்று வர வான்வழிக்கட்டணம்,( US $135.6+166.6 =302.2 ) Rs. 18,132.00(To be paid)

vi. வங்கிக்கட்டணம் Rs. 140.00

c. வங்கியில் இருப்பு ................................................................................ Rs. 53,860.00

5. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இந்தியக்கிளை தொடங்குதல்: தனிமனித மற்றும் நிறுவன வாழ்நாள் உறுப்பினர் சேர்க்கை நிறைவுற்றபின் இந்தியக்கிள உறுப்பினர்களைத் தேர்வு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

6. இந்தியக்கிளையின் துணைக்கிளைகள் தொடங்குதல் ; தனிமனித மற்றும் நிறுவன வாழ்நாள் உறுப்பினர் சேர்க்கை நிறைவுற்றபின் இந்தியக்கிள உறுப்பினர்களைத் தேர்வு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

7. திட்டப்பணிகள் பற்றி நிகழ்ந்த கலந்தாய்வின் முடிவுகள்;

7.1 தனிமனித உறுப்பினர் சேர்க்கை

i. தனிமனித உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக முனைவர் உலகநாயகி அவர்கள் மேற்கொண்ட முயற்சியில் 11 ஆர்வலர்களை ஆண்டு உறுப்பினர்களாக சேர்த்துள்ளதாகவும், சேர்த்துள்ள உறுப்பினர்களின் விண்ணப்பங்களை துணைத்தலைவருக்கு அனுப்புவதாகவும், வசூலித்த ஆண்டுக்கட்டணத்தை ( உரு. 11000.00 ) வங்கிக்கணக்கில் கட்டிவிடுவத்தாகவும் தெரிவித்தார்கள். அவர் சேர்த்துள்ள 11 உறுப்பினர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளனர்;

1) பேரா. முனைவர் பெ. அர்த்தநாரீசுவரன்
2) பேரா. முனைவர் புவனேஸ்வரி
3) பேரா. முனைவர் அல்போன்ஸா
4) பேரா. முனைவர் அங்கையர்க்கன்னி
5) பேரா. முனைவர் விஜயலட்சுமி
6) பேரா. முனைவர் கௌசல்யா
7) பேரா. முனைவர் பிரேமா ரத்தினவேல்
8) பேரா. முனைவர் எழிலரசி
9) பேரா. முனைவர் வசந்தாள்
10) பேரா. முனைவர் ஹேமலதா
11) பேரா. முனைவர் பாலுசாமி

ii. புலவர் பிரான்சிசு சவரி முத்து, சிக்காகோ, அமெரிக்கா, வாழ்நாள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளார்.

iii. திரு.இரா.மதிவாணன் உரு.10,000.00 காசோலையாக வழங்கி வாழ்நாள் உறுப்பினராகச் சேர்ந்தார்.

iv. முனைவர் அரங்க இராமலிங்கம் வாழ்நாள் உறுப்பினராகச் சேருவதற்கு இசைவளித்து விண்ணபப்படிவம் பெற்றுக் கொண்டார்.

v. முனைவர் மணிகண்டன் வாழ்நாள் உறுப்பினராகச் சேருவதற்கு இசைவளித்து விண்ணபப்படிவம் பெற்றுக் கொண்டார்

**இணைப்பு - 2**

**எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களாகிய 18 இலக்கியங்களின் வாழ்வியல் சிந்தனைகள் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்துவதற்கான பொருண்மைகளையும் சொற்பொழிவாளர்களின் பெயர்களும்:**

**18 மாதக் கூட்டம் 18 இலக்கியம்**

a. **எட்டுத் தொகை**

i. நற்றிணை- பேரா. இ. சுந்தரமூர்த்தி
ii. குறுந்தொகை- பேரா. முனைவர் அரங்க. இராமலிங்கம்
iii. ஐங்குறுநூறு- பேரா. முனைவர் மோகன் (மதுரை)
iv. பதிற்றுப் பத்து- பேரா. முனைவர் மணிகண்டன்
v. பரிபாடல்- பேரா. முனைவர் தெ.ஞானசுந்தரம்
vi. கலித்தொகை - பேரா. முனைவர் உலகநாயகிபழனி
vii. அகநானூறு- பேரா. முனைவர் அர்த்தநரீசுவரன்
viii. புறநானூறு- கவிஞர் கங்கை மணிமாறன்

b. **பத்துப்பாட்டு**

ix. திருமுருகாற்றுப் படை- பேரா. முனைவர் கவிஞர் மதிவாணன்
x. பொருநராற்றுப்படை- புலவர் மா.கி. இரமணன்
xi. சிறுபாணற்றுப்படை- பேரா. முனைவர் ப.மகாலிங்கம்
xii. பெரும்பாணாற்றுப்படை- கவிஞர் திரு.திருப்பூர்கிருஷ்ணன்
xiii. நெடுநல்வாடை- பேரா. முனைவர் முகிலை இராஜபாண்டியன்
xiv. குறிஞ்சிப்பாட்டு -பேரா. முனைவர் ரேவதி கிருபாகரன்
xv. முல்லைப் பாட்டு- பேரா. முனைவர் சரசுவரி இராமநாதன்
xvi. மதுரைக் காஞ்சி- பேரா. முனைவர் பெ. இலட்சுமிநாராயணன்
xvii. பட்டினப்பாலை- பேரா. முனைவர் மறைமலை இலக்குவனார்
xviii. மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)- பேரா. முனைவர் ராஜா

**இணைப்பு - 3**

## தேசியக்கிளைகள் செய்யவேண்டிய செயல்திட்டங்கள்

a. தனி மனித மற்றும் நிறுவன உறுப்பினர்களைச் சேர்த்தல்

b. சங்க இலக்கியங்கள் பற்றிய பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல்

c. சங்க இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளை ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தமிழ் ஆய்வு நிறுவனங்களுடனும் தமிழ் அறிஞர்களுடனும் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுதல்.

d. தமிழியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

e. மக்களிடையே தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தமிழ் இலக்கிய சிறப்புகள் ஆகியவற்றை பரப்புவதற்காக செய்திமடல்கள், இதழ்கள், தனி வரைவு நூல்கள் போன்ற வெளியீடுகளை வெளியிடுதல்.

f. மன்றத்தின் தனித்தன்மையை இழக்காமல், பிற நிறுவனங்களோடு இணைந்து மன்றத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லுதல்.

g. மன்றத்தின் நோக்கங்களை மேம்படுத்தும் வகையில் தமிழியல் ஆய்வில் ஈடுபடுபவர்களுக்கு விருதுகள், உதவித்தொகை, மாநாடுகளில் கலந்துகொள்ள பயணப்படி போன்றவற்றை வழங்குதல்.

h. சங்க இலக்கியங்களை பிற மொழிகளில் மொழிபெயர்த்தல்

i. மொழிபெயர்த்த சங்க இலக்கியங்களை பதிப்பித்து வெளியிடல்

j. உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்த மன்றத்தின் மையக்குழுவிற்குத் துணையாகச் செயல்படல்

k. உலகத் தமிழர்களின் தமிழ்க்கல்வித் தேவையை நிறைவேற்ற உலகத்தமிழ் அமைப்புகளோடும் உலகளவிய தமிழ்ச்சங்கங்களோடும் இணைந்து செயல்படல்

l. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் வெளியிடவுள்ள 'உலகத்தமிழ் பண்பாட்டு இதழ் - International Journal of Tamil Culture and Civilization '

என்னும் இதழ் வெற்றிகரமாக வெளிவர் வேண்டிய வகையிலெல்லாம் மன்றத்தின் மையக்குழுவிற்குத் துணையாக செயல்படல்

## Activities of the National Units of IATR

a. To promote Individual and Institutional membership
b. To organize workshops and seminars on Tamil Literature, culture, history and Art periodically.
c. To promote multi-disciplinary research on modern scientific lines in all aspects of Tamil studies, and in the allied fields with the active collaboration with organizations and scholars in the country interested in such studies.
d. To publish bulletins, newsletters, journals, mono-graphs or other publications for the dissemination of information in the fields of Tamil Literature, culture, history and Art periodically.
e. Collaborate with other academic, Government and Private organizations and persons in promoting the objects of the Association without prejudice to its academic autonomy.
f. Award scholarships, travel grants, or such other assistance as may be conductive towards promotion of the objects of Association.
g. To Institute awards for the Tamil Scholar for their unique contribution in proximity Tamil culture and Civilization.
h. To promote translational activities for translating Tamil literatures in the local language of the country concerned.
i. To publish the translated Tamil literatures in different languages.
j. To help IATR in organizing International Tamil Research conferences in different parts of the world.

k. To promote Tamil Language teaching and learning activities for the benefit of the Tamil children in the country of the National Unit, in collaboration with the international organizations involved in such activities.

l. To support IATR in bringing out Tamil Research journals on Tamil Culture and Civilization.